BSNL ஊழியர் சங்கம்
தமிழ் மாநிலம்

சுற்றறிக்கை எண்:16 **தேதி:-21.08.2017**

BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு மற்றும் இதர செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

BSNL ஊழியர் சங்கத்தின் மத்திய செயற்குழு புது டெல்லியில் 2017 நவம்பர் 7 மற்றும் 8ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. அதற்கு முன் 2017 செப்டம்பர் 16ஆம் தேதி மத்திய செயலகக் கூட்டம் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்பூரில் நடைபெற உள்ளது.

நவம்பர் புரட்சி நூற்றாண்டு விழா கருத்தரங்கம்:- நாடு முழுவதும் தமிழகம் உள்ளிட்ட 9 மையங்களில் நவம்பர் புரட்சியின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம் நடத்த வேண்டும் என BSNL ஊழியர் சங்கத்தின் மையக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நவம்பர் 7ஆம் தேதிக்கு முன் நடைபெற வேண்டும் என்பதால் தமிழ் மாநில மையக் கூட்டத்தில் இது தொடர்பாக விவாதித்து முடிவு எடுக்கப்படும்.

2017 நவம்பர் 9 முதல் 11 வரை புது டெல்லியில் தொடர் தர்ணா:- 08.08.2017 அன்று புது டெல்லியில் நடைபெற்ற அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் மற்றும் BSNL ஊழியர் சங்கம் உள்ளிட்ட சுயேட்சையான தொழிற்சங்கங்களின் தேசிய கருத்தரங்கில் 2017 நவம்பர் 9 முதல் 11 வரை மூன்று நாட்கள் தொடர் தர்ணா நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. நரேந்திர மோடி அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத, கார்ப்பரேட் ஆதரவு கொள்கைகளுக்கு எதிராக இந்த மூன்று நாட்களிலும் லட்சக்கணக்கான தொழிலாளர்களை திரட்டுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. நமது சங்கத்தின் சார்பில் பெருமளவு தொழிலாளர்களை மூன்று நாட்களிலும் திரட்டவேண்டும் என நமது அகில இந்திய சங்கத்தின் மையக் கூட்டம் தீர்மானித்துள்ளது. நமது மாவட்ட சங்கங்கள் இதற்கான தயாரிப்பு பணிகளை உடனடியாக துவங்க வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

ஊதிய மாற்றத்திற்காக ஒன்று பட்ட போராட்டத்தில் இணைய AIBSNLEA சங்கத்திற்கு அழைப்பு:- AIBSNLEA சங்கத்தின் இணைய தளத்தில் ஒன்று பட்ட போராட்டத்தின் மூலமே ஊதிய மாற்றத்தை அடைய முடியும் என்று அதன் பொது செயலாளர் எழுதியுள்ளார். அதன் அடிப்படையில் நமது பொதுச் செயலாளர் தோழர் P.அபிமன்யு AIBSNLEA சங்கத்திற்கு ஒன்று பட்டு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். அதற்கு சாதகமான பதிலை AIBSNLEA பொது செயலாளர் தோழர் பிரகலாத் ராய் கொடுத்துள்ளார்.

ஊதிய மாற்ற பிரச்சனைக்காக BSNL நிர்வாகம் ஒரு குழுவை உருவாக்கியுள்ளது:- 09.08.2017 அன்று அனைத்து சங்கங்களுடன் நடைபெற்ற கூட்டத்தில் ஊதிய மாற்றம் தொடர்பான பிரச்சனைகளுக்காக ஒரு குழுவை உருவாக்குவதாக BSNL CMந தெரிவித்திருந்தார். 03.08.2017 அன்று நPE கொடுத்துள்ள கடிதத்தின் அடிப்படையில் BSNLல் ஊதிய மாற்ற பிரச்சனையை எவ்வாறு அரசாங்கத்திற்கு எடுத்து செல்வது என்பது தொடர்பாக நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குவதே இந்தக் குழுவின் பணி.

விடுபட்ட கேடர்களுக்கு பெயர் மாற்றம்:- விடுபட்ட கேடர்களின் பெயர் மாற்றம் தொடர்பாக விவாதிக்க அமைக்கப்பட்ட குழுவின் கூட்டம் 06.09.2017 அன்று நடைபெறும்.

ஒத்தி வைக்கப்பட்டுள்ள தேசியகவுன்சில் கூட்டத்தை கூட்ட வலியுறுத்தல்:- 11.05.2017 அன்று நடைபெற்ற 35வது தேசிய கவுன்சில் கூட்டத்தில் நேரமின்மை காரணமாக 12 ஆய்படு பொருட்களே விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தை ஒத்தி வைக்கும் போது ஒத்தி வைக்கப்பட்ட கூட்டத்தை விரைவில் நடத்த நிர்வாகம் உறுதி அளித்தது. ஆனால் இதுவரை அதற்கான அறிவிப்பு வராத நிலையில் உடனடியாக அந்தக் கூட்டத்தை நடத்த ஊழியர் தரப்பு செயலாளரான தோழர் P.அபிமன்யு 16.08.2017 அன்று நIRECTOR(HR)க்கு கடிதம் எழுதியுள்ளார்.

BSNLன் மொபைல் உரிமத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீட்டிக்க வேண்டும்:- 2000ம் வருடத்தில் BSNLக்கு 20 ஆண்டுகளுக்கு மொபைல் உரிமத்தை அரசாங்கம் வழங்கியது. அதன் அடிப்படையில் 2020ல் அந்த உரிம காலம் முடிவடையும். ஆனால் 2002ஆம் ஆண்டிலிருந்து தான் BSNL மொபைல் சேவைகளை வழங்க தொடங்கியதை கணக்கில் கொண்டு 2022ஆம் ஆண்டு வரை அதன் உரிமத்தை நீட்டிக்க வேண்டும் என BSNL நிறுவனம் அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியுள்ளது.

ரிலையன்ஸ் ஜியோவின் போட்டியால் BSNLன் வருவாய் குறையவில்லை:- ரிலையன்ஸ் ஜியோவின் போட்டியின் காரணமாக அனைத்து தனியார் தொலை தொடர்பு நிறுவனங்களின் வருவாயும் கடுமையாக குறைந்துளது. ஆனால் BSNLன் வருவாய் குறையவில்லை என்பது பாராட்டத்தக்க அம்சம். BSNL CMந திரு அனுபம் ஸ்ரீவாஸ்தவா கொடுத்துள்ள பத்திரிக்கை செய்தியின் அடிப்படையில் 2015-16ல் 28,449 கோடி ரூபாய்களாக இருந்த BSNLன் வருவாய் 2016-17ல் 28,477 கோடியாக உயர்ந்துள்ளது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

(A.பாபு ராதாகிருஷ்ணன்)
மாநிலச் செயலாளர்